# மலேசிய உருவாக்கத்தில் ஈடுபட்ட தலைவர்களும் மாநிலங்களும்

தலைவர்களுக்கிடையிலான ஒருமைப்பாடு மலேசிய உருவாக்கத்தின் வெற்றிச் சுடராக அமைந்தது. எல்லாத் தரப்பினரின் முனைப்பும் ஒத்துழைப்பும் மலேசிய உருவாக்கத்தின் வெற்றிக்கு இட்டுச் சென்றது.

## மலேசிய உருவாக்கத் திலகங்கள்



- தேசிய மலாய்க்காரர் கூட்டமைப்பின் (UMNO) தலைவர்.
- கூட்டரசு மலாயாவின் பிரதமர்.
- லண்டனில் நடைபெற்ற மலேசிய உடன்படிக்கையில் கூட்டரசு மலாயாவின் பிரதிநிதிகளுக்குத் தலைமையேற்றவர்.



- தேசிய மலாய்க்காரர் கூட்டமைப்பின் (UMNO) தலைவர்.
- கூட்டரசு மலாயாவின் துணைப்பிரதமர்.
- அரசுகளுக்கு இடையிலான செயற்குழுவில் (JAK) பங்காற்றியவர்.



- பெசாகா அனாக் சரவாக் கட்சியின் (PESAKA) தலைவர்.
- 'செத்தியா காவான் மலேசியா' செயற்குழுவில் (JSKM) உறுப்பியம் வகித்தவர்.
- 1963ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற மலேசிய உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவர்.

துன் தெமெங்கோங் ஜுகா அனாக் பரியெங் (Tun Temenggung Jugah anak Barieng )

துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல்ஹாஜ் (Tunku Abdul Rahman Putra Al-Haj)

துன் அப்துல் ரசாக் உசேன் (Tun Abdul Razak Hussein)

LIVEWORKSHEETS







- சபா தேசியக் கூட்டமைப்பின் (USNO) தலைவர்.
- சபா மக்களுக்கு மலேசிய உருவாக்கம் தொடர்பாக விளக்கம் அளித்தவர்.

- மக்கள் செயல் கட்சியின் (PAP) தலைவர்.
- சிங்கப்பூரில் கம்யூனிஸ்ட்டு சித்தாந்தத்தை முடக்குவதற்காக மலேசிய உருவாக்கச் சிந்தனைக்கு ஆதரவு அளித்தவர்.

- சரவாக் தேசியக் கட்சியின் (SNAP) தலைவர்.
- சரவாக் கூட்டணி உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியதோடு மலேசிய உருவாக்க முயற்சியை ஆதரித்தவர்.

லீ குவான் யூ
(Lee Kuan Yew)

டான் ஸ்ரீ டத்தோ அமார் ஸ்டீபன் காலோங் நிங்கான்
( Tan Sri Datuk Amar Stephen Kalong Ningkan)

துன் டத்து முஸ்தாப்பா டத்து ஹருண்
(Tun Datu Mustapha Datu Harun)





LIVEWORKSHEETS







- தேசியக் கடசான் கூட்டமைப்பின் (UNKO) தலைவர்.
- மலேசிய உருவாக்கத்தை வெற்றி பெறச் செய்ய 'செத்தியா காவான் மலேசியா' செயற்குழுவை (JSKM) அமைக்க முன்மொழிந்தவர்.

- பார்ட்டி நெகாரா சரவாக் (PANAS) தலைவர்.
- மலேசிய உருவாக்கத்தை ஆதரித்தவர்.
- 1963ஆம் ஆண்டு லண்டனில் மலேசிய உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவர்.

- தேசிய மலாய்க்காரர் கூட்டமைப்பின் (UMNO) தலைவர்.
- கோபோல்ட் ஆணையத்தில் உறுப்பியம் வகித்தவர்.
- வெளியுறவு அமைச்சின் நிரந்தரத் தலைமைச் செயலாளராகப் பதவி வகித்தபோது மலேசிய உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவர்.

துன் முகமட் கசாலி ஷாபியி
( Tun Muhammad Ghazali Shafie)

டோனால்ட் ஸ்டீபன்ஸ் (துன் முகம்ட் புவாட் ஸ்டீபன்ஸ்)
Donald Stephens ( Tun Muhammad Fuad Stephens)

டத்து பண்டார் அபாங் ஹஜி முஸ்தப்பா
(Datu Bandar Abang Haji Mustapha)




KPM
LIVEWORKSHEETS





- மலேசிய சீனர் சங்கத்தின் (MCA) தலைவர்.
- கோபோல்ட் ஆணையத்தின் கூட்டரசு மலாயா நிகராளி.
- மலேசிய உருவாக்கம் தொடர்பாகச் சரவாக், சபா மக்களை நேர்காணல் செய்து கோரிக்கை மனுவை ஆய்ந்தவர்.

- மலேசிய இந்தியர் காங்கிரசின் (MIC) தலைவர்.
- கூட்டரசு மலாயா அமைச்சரவைக் குழுவோடு சேர்ந்து கோபோல்ட் ஆணையத் திட்ட அறிக்கையைக் கருத்தூன்றி ஆய்ந்தவர்.



டான் ஸ்ரீ வோங் பாவ் நீ
(Tan Sri Wong Pow Nee)

துன் வீ.தி. சம்பந்தன்
(Tun V.T. Sambanthan)

**நடவடிக்கை** **விடய ஆய்வு (Kajian Kes)**

மலேசிய உருவாக்கத்தில் நற்சேவை ஆற்றிய திலகங்கள் பற்றிய விடய ஆய்வு தயாரித்திடுக.

'ஒற்றுமையே பலம்'. இது போன்ற பழமொழிகளை மலேசிய உருவாக்கத் தலைவர்களின் முயற்சியோடு தொடர்புபடுத்துக.

**ஆசிரியர் குறிப்பு**

10.1.3

- மலேசிய உருவாக்கத் திலகங்களைப் பற்றி ஆழமாகத் தெரிந்துகொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.



LIVEWORKSHEETS